2026 –பிப்ரவரி மாதம் 04–ஆம் தேதி புதன்கிழமை.
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 344/2023*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 1 அரவிந்த் |
| தந்தையார் பெயர் | : | தாமரைச்செல்வன் |
| ஊர் | : | சென்னை |
| வட்டம் | : | சென்னை |
| மாவட்டம் | : | சென்னை |
| தொழில் | : | சட்ட அலுவலர் |
| வயது | : | 24 |

**<u>தேதி: 04.02.2026</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சட்ட அலுவலர் ஆவேன். நான் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எ.ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**<u>எனது சார்பாக:–</u>**

1). 1–ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதற்கான பதிவு சான்றிதழின் உண்மை நகலைத் தாக்கல் செய்கின்றேன். அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 1–ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதற்கான காப்பீட்டு கொள்கைகள் குறிப்பேட்டின் உண்மை நகலைத் தாக்கல் செய்கின்றேன். அது **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்து சமயத்தில் 1–ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி அமலில்தான் இருந்தது. மேற்படி பாலிசி பேக்கேஜ் பாலிசிதான் என்றால் சரிதான். மனுதாரர் விபத்திற்குள்ளான வாகனத்தில் ஓட்டுநர் அல்லாத இருக்கையில் பயணம் செய்தார் என்றால் சரிதான். எங்கள் நிறுவன காப்பீட்டு விதிகளின்படி இரண்டு நபர்களுக்கு 1–ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் மேற்படி காப்பீடு மனுதாரருக்கு பொருந்தாது. மேற்படி காப்பீட்டில் மனுதாரருக்கு பொருந்தாது என்று குறிப்பிட்டு நிரூபிக்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்படி காப்பீட்டைப் பொருத்து 3–ஆம் தரப்பினர் என்றும் எனவே மேற்படி காப்பீட்டு விதிகளின்படி மனுதாரருக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 1–ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தில் காப்பீட்டு நிபந்தனைகளின்படி இரண்டு நபர்களுக்கு மேல் பயணம் செய்யாததால் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**